


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.9.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 181 கோடியே 40 இலட்சம் ரூபாய் மிதமான வேளாண் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் விதமாக மூன்று விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்குவதற்கான செயல்முறை ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை – உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் முனைவர் இரா. நந்தகோபால், வேளாண்மை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், வேளாண்மை துறை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப்.6–

திருப்பூர் மாவட்டத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் அறிவிப்பு வருமாறு :

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், மாதப்பூர் கிராமம், மஜரா கள்ளக்கிணர் அருகில் குரைதோட்டம் என்ற இடத்தில் 392023 அன்று இரவு அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் மது அருந்திவிட்டு புஷ்பவதி, க/பெ. பழனிசாமி (வயது 69), ரத்தினாம்பாள், க/பெ. சுப்பிரமணியம் (வயது 58), செந்தில்குமார், த/பெ.சண்முகம் (வயது 48) மற்றும் மோகன்ராஜ், த/பெ.பழனிசாமி (வயது 45) ஆகியோரை அரிவாளால் வெட்டியதில் அனைவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற அதிர்ச்சியான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இக்குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவரை பிடித்து காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர் ஏனைய குற்றவாளிகளையும் விரைவில் கைது செய்ய உத்திரவிட்டுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்திரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### இனப்படுகொலைக்கு அழைப்பு விடுவதாக

# பொய்யைப் பரப்பும் பத்தாம் பசலிக் கூட்டம்!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் பா.ஜ.க.விற்கு கண்டனம்!

சென்னை, செப். 6 -

இனப்படுகொலைக்கு அழைப்பு விடுவதாக பொய்யை பரப்பும் மோடி, அமித்ஷா, நிர்மலா சீதாராமன், நட்டா, அண்ணாமலை ஆகியோர் பத்தாம் பசலித்தனமாக நடந்து கொள்வதாக ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குட்டு வைத்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் சனிக்கிழமையன்று சென்னையில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்று தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன் வைத்த கருத்தை திரித்தும், திருகியும் சங் பரிவாரக் கூட்டம் வெறுப்பு அரசியலை விசிறி அடிக்கத் துவங்கியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தின் வழக்கமான ஆயுதமான பொய்யையும், புனை சுருட்டையும் அள்ளிவீசுகின்றனர். ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பா.ஜ.க. தலைவர்கள் நட்டா, அண்ணாமலை என அனைவரும் களத்தில் இறங்கியுள்ளனர்.

மாநாட்டில் பேசிய யாரும் எந்தவொரு மதத்தைச் சேர்ந்தவர்களையும் புண்படுத்தும்




படியோ, இழிவுபடுத்தும்படியோ எதுவும் பேச வில்லை. மாறாக, சனாதனம் என்ற பெயரில் பல நூறு ஆண்டுகளாக உழைக்கும் மக்களை அடிமைப்படுத்தக்கூடிய சிந்தனைகளைத்தான் கண்டித்தார்கள். பிறப்பின் அடிப்படையில்தான் ஒருவருடைய தகுதி தீர்மானிக் கப்படுகிறது என்ற சாதிய மேலாதிக்கக் கோட்பாட்டையும் பெண்ணடிமைத்தனத்தை நியாயப் படுத்தக் கூடிய கருத்துக்களையும் மூடநம்பிக்கைகளையும் சாடினர்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும் போது, கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளி உடன்கட்டை ஏற வைத்தது, கைம்பெண்களுக்கு மொட்டைஅடித்து வெள்ளைப்புடவை உடுத்தச் சொன்னது, குழந்தைத் திருமணங்களை நடத்தி வைத்தது, இதைத் தானே பெண்களுக்கு சனாதனம் செய்தது என்று சரியாகவே கேட்டார். பெண்களுக்கு எதிரான இந்தக் கொடுமைகளை எதிர்த்து இந்தியாவில் நீண்ட நெடிய போராட்டங்கள் நடந்துள்ளன. இந்தக் கொடுமைகள் எல்லாம் மநு அநீதியின் பெயராலும் வர்ணாசிரமத்தின் பெயராலும் நடத்தப்பட்டன என்பதை இன்றைக்கு அலறுபவர்கள் மறுக்க முடியுமா?

மோடி அரசு கொண்டு வந்துள்ள விஸ்வகர்மா திட்டம் குலக் கல்வியை மீண்டும் கொண்டுவரும் திட்டம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இதையெல்லாம் மறைத்து விட்டு இனப்படுகொலைக்கு அழைப்பு விடுப்பதாக சங்பரிவாரம் பொய்யை பரப்புகிறது. தில்லியில் பொய்ப் புகார் கொடுக்கின்றனர். ஆனால் தன்னுடைய வார்த்தைகளில் தாம் உறுதியாக இருப்பதாகவும் சட்டப்பூர்வமாக எதிர்கொள்வேன் என்றும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார். மாறாத தர்மம் என்று சொல்லி சாதிய மேலாதிக்கத்தை நியாயப் படுத்துபவர்களின் வழிவந்தவர்கள் தான் இன்றைக்கு ஆத்திரத்தில் அவதூறு செய்கின்றனர். சனாதனத்தின் பெயரால் இஸ்லாமிய, கிறிஸ்தவ பட்டியலின மக்களை படுகொலை செய்பவர்கள், இல்லாத ஒன்றை பொல்லாத வகையில் திரித்துப் பேசுவதை இந்தியா நிராகரிக்கும்.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் சாடியுள்ளது.

### ‘இஸ்ரோ’ விண்ணில் ராக்கெட்டுகளை ஏவும்போது வர்ணனை செய்த

# திருமதி வளர்மதி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 6–

இஸ்ரோ விண்ணில் ராக்கெட்களை ஏவும் போது அவை குறித்த தகவல்களை வர்ணனை செய்து வந்த திருமதி. வளர்மதி அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

இஸ்ரோ விண்ணில் ராக்கெட்டுகளை ஏவும் போது அவை குறித்த தகவல்களை வர்ணனை செய்து வந்த ‘Mission Range Speaker’ திருமதி. வளர்மதி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

மிகவும் சவாலான ஒரு பணியைத் திறம்படக் கையாண்டு, இஸ்ரோவின் முக்கியத் திட்டப்பணிகளுடைய வெற்றித் தருணங்களின் குரலாக ஒலித்த திருமதி. வளர்மதி அவர்களது



மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும், அவரது பணியிடத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் கிழக்கு ஒன்றியத்தில் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா மற்றும் வாக்கு சாவடி முகவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தேர்தல் பணியில் சிறப்பாக பணியாற்றுவது குறித்து ஆலோசனை வழங்கினார். மற்றும் மாவட்டக் கழக பொருளாளர் மு.கார்த்திகேயன், ஓமலூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஓ.எம்.ரமேஷ். மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் அழகிரி, சண்முகம், பொதுக்குழு உறுப்பினர் குப்புசாமி, பேரூர் கழக செயலாளர் ரவிச்சந்திரன், பேரூராட்சித் தலைவர் செல்வராணி ரவிச்சந்திரன், ஜெயக்குமார் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### உதயநிதி ஸ்டாலின் கூறியதில் என்ன குற்றம்?

# சனாதனவாதிகள் உறுமுவது ஏன்? திசை திருப்புவது ஏன்?

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 6-

சனாதனத்தை அழிக்க வேண்டும் என்று தி.மு.க. இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான மானமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் சென்னையில் (2.9.2023) நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் ஆற்றிய உரையைத் திரித்துப் பிரச்சாரம் செய்யும், சமூக வலைதளங்களில் திசை திருப்பும் வகையில் பதிவிடும் நீதிமன்றத்திற்குச் செல்லும் பேர்வழிகளுக்குப் பதிலடி கொடுத்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திடீரென்று நாடாளுமன்றத்தின் சிறப்புத் தொடர் கூட்டம் வரும் 18.9.2023 அன்று முதல் 22 ஆம் தேதிவரை அய்ந்து நாள்கள் நடைபெறும் என்ற அறிவிப்பு நாடாளுமன்ற மக்களவை சபாநாயகரால் அறிவிக்கப்பட்டுள்ளது. கிலியடித்துள்ளது பா.ஜ.க.விற்கு!

2.9.2023 அன்று சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பாக நடைபெற்ற சனாதன அழிப்பு மாநாட்டை நான் தொடங்கி வைத்து உரையாற்றிய பின்னர், தி.மு.க.வின் இளைஞரணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

அவரின் பொறுப்பான, சிறப்பான உரை ஒலி நாடாக்களிலும், காட்சிப் பதிவாகவும் பதிவாகியுள்ளதோடு, ‘முரசொலி’, ‘விடுதலை’ நாளேடுகளில் முழுமையாகவும் அப்படியே வெளிவந்துள்ளது.

**மானமிகு உதயநிதி ஸ்டாலின் பேசியது என்ன?**

அவர் ஏதோ இனப்படுகொலை (Genocide) செய்யச் சொன்னதுபோல, பல சமூக ஊடகங்களாலும், நாட்டின் பொறுப்பான பதவிகளில் உள்ளவர்களாலும் திட்டமிட்டு திரித்துப் பரப்பப்பட்டு வருவது என்பது வன்



மையான கண்டனத்திற்குரியது; அந்தப்படி பரப்பு அப்பட்டமான ‘ஜமுக்காளத்தில் வடிகட்டிய பச்சைப் பொய் மூட்டை’ ஆகும்!

**திரிபுவாதம் பா.ஜ.க.வுக்குக் கைவந்த கலை!**

இது பா.ஜ.க.வினருக்குக் கைவந்த கலையே! பீகார் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்று வட இந்தியாவில் ஓர் அவதூறுப் புயலைக் கிளப்பி விடவில்லையா? அந்த நபர் தமிழ்நாடு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதுண்டே! அவர் ஜாமீன் கோரியபோது, நீதிமன்றங்களே இதுபோன்ற அவதூறு பொய் மூட்டைகளைத் தயாரிக்கும் போக்கைக் குறிப்பிட்டு, கண்டித்த வரலாறு சில மாதங்களுக்கு முன் நடந்தது மறந்தா போகும்?

கருத்தைக் கருத்தால் சந்தித்துக் களமாடுவதுதான் கழகங்களின் பணியே தவிர, வன்முறை வெறுப்புக் காரியத்தில் மக்களை இழுத்துவிடுவதல்ல!

எதிர்க்கட்சிகளின் எழுத்துகளை, உரைகளை வெட்டியும், ஒட்டியும் (Out of Content) பொருந்தாதவையை பொருந்த வைத்து, விஷமதானம் செய்வது பா.ஜ.க.வின் அன்றாட திரிபு வேலை. அதற்குத்தான் பலரை ஒரு பட்டாளமாக திரட்டி பணி செய்ய வைத்து, உண்மைகளை களப் பலியாக்கி, அதில் வெற்றி காணலாம் என்பது காவிகளின் சர்வ சாதாரணமான தினப் பணியே!

அதுபோலவேதான் அமைச்சர் உதயநிதிப் பேச்சின்மீதான திரிபுவாதம்!

இதுமாதிரி பூச்சாண்டிக்கெல்லாம் பயப்படுவது திராவிட இயக்கத்தின் ரத்த ஓட்டத்தில் என்றுமே கிடையாது!

**எதிர்கொள்ளத் தயார்!**

உண்மையை உலகத்திற்கு உணர்த்தி எந்த நிலையையும் எதிர்கொள்ளப் பின்வாங்காதவர்கள் நாங்கள்!

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் உச்ச நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளும் வந்த பிறகும்கூட, எப்படியெல்லாம் மீண்டும் மீண்டும் அதை ஏற்காமல், ‘பொய் நெல்லைக் குத்தி பொங்கலிட்டு’ சாப்பிட்டு மகிழ ‘அவாள்’ ஆயத்தமாகிறார்கள்! இது சனாதனப் புத்தி அல்லவா!

இந்தக் கோயபெல்சின் குருநாதர்களை மக்கள் நன்கு புரிந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

**வன்முறைக்குச் சொந்தக்காரர்கள் யார்?**

தங்களுக்கு எதிரான மார்க்கத்தைப் பரப்பிய மனித சமத்துவத்தை வலியுறுத்திய பிறப்பின் அடிப்படையிலான வருண பேதத்தை எதிர்த்த பவுத்தர்களைக் கொன்று குவித்தவர்கள் யார்? எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றிக் கொன்றவர்கள் யார்?

இத்தகைய கூட்டம்தான் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சொல்லாததை சொன்னதாகச் சொல்லி, மதவாத நெருப்பை மூட்டி, வட மாநிலங்களில் தேர்தலில் ஆதாய வடை சுட முயலுகிறார்கள்.

**பேதத்தை ஒழிப்பது குற்றமா?**

ஜாதி ஒழிப்பு என்றால் ஜாதிக்காரர்களைக் கொல்லுவது என்று பொருளாகுமா?

மூடநம்பிக்கை ஒழிப்பு என்றால், மூடநம்பிக்கையாளர்களை சாகடிப்பது என்று பொருளாகுமா?

ஏழ்மை ஒழிப்பு என்றால், செல்வந்தர்களைத் தீர்த்துக் கட்டுவது என்று பொருளாகுமா?

அதேபோல், சனாதன அழிப்பு என்றால், பிறப்பில் பேதம் பேசும் வருணாசிரம தர்மத்தை ஒழிப்பது என்று பொருள் சமதர்மத்தை சமத்துவத்தை வளர்ப்பது என்று பொருள். ஆளைக் கொல்லுவதல்ல. பேதத்தை ஒழிக்கும் கருத்தின் அடிப்படையில்தான் மானமிகு உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

தேர்தலில் மக்களைச் சந்திக்கக் கைவசம் வேறு சரக்கு இல்லாதவர்கள், திரிபுவாத மதவாத ஆயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்படுகிறார்கள். அந்தோ பரிதாபம்!

**மக்கள் அடையாளம் காணட்டும்!**

450 ஆண்டுகால வரலாறு படைத்த சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத்தலத்தை அயோத்தியில் இடித்தவர்கள், இடிக்கப்பட்ட அதே இடத்திலேயே இராமன் கோவில் கட்டுபவர்கள் தான் மானமிகு உதயநிதி ஸ்டாலினின் அறிவார்ந்த சமத்துவக் கொள்கைப் பிரகடனத்தை வன்முறைப் பேச்சாக திசை திருப்புகிறார்கள், திரிக்கிறார்கள்.

எல்லாவற்றையும் தாண்டி பிரார்த்தனைக் கூட்டத்தில் ‘தேசப்பிதா’ காந்தியாரைக் கும்பிட்டுக் கொண்டேசுட்டுக் கொன்ற நாதுராம் விநாயக் கோட்சேவை இன்றும் பாராட்டி வழிபடுவோர் யார் என்பது உலகறிந்ததே!

**மக்கள் இவர்களை அடையாளம் காண்பார்களாக!**

சென்னையில் 2.9.2023 அன்று ஓர் அரங்கத்திற்குள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரையை அகில இந்தியாவிலும், அதற்கப்பாலும் பரப்பி, அவர் சரியான ஆதாரப்பூர்வ விளக்கம் தந்த பிறகும், நீங்கள் சனாதன முகங்காட்டி ஆடுவது தொடரட்டும்; திராவிட வயலுக்கு அதைவிட நல்ல உரம் வேறு இல்லை.

சந்திக்கத் தயார் என்று அந்த வேங்கைகளின் கொள்கை வாரிசு அதை எதிர்கொண்ட முறை, அவர் வெறும் வாரிசு அல்ல; கொள்கையில் புடம் போட்டு ஜொலிக்கும் திராவிடப் பாசறையின் புதிய வளரும் நம்பிக்கை நாயகன் என்று காட்ட ஒரு வாய்ப்பளித்த உள்துறை அமைச்சகம் தொடங்கி, கடைசி காவிகள்வரை எமது நன்றி! நன்றி!! நன்றி!!!

“‘ஈரோடு போனவர்கள் என்றும் நீரோடு போக மாட்டார்கள்; எதிர்நீச்சல் எங்கள் ஆற்றல் வெற்றி பலம் காட்டும் வாடிக்கை” என்ற கலைஞரின் திராவிடப் பாரம்பரிய எங்கள் வேங்கைகளை வெளிச்சத்திற்குக் காட்டுபவர்களே, தொடரட்டும் உங்கள் தூற்றல்!

வீழட்டும் சனாதனம்!

வெல்லட்டும் திராவிடம்!!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருத்து

# பகுத்தறிவாளர்கள் தொடர்ந்து முன்வைத்து வரும் கருத்துதான்!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, செப். 6 -

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருத்து பகுத்தறிவாளர்கள் தொடர்ந்து முன் வைத்து வரும் கருத்துதான், வேண்டும் என்றே திட்டமிட்டே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது அவதூறு பரப்பப்பட்டு வருகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு : -

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சனாதானம். குறித்து தெரிவித்த கருத்து, பகுத்தறிவாளர்கள் தொடர்ந்து முன்வைத்து வருவதுதான். கடந்த காலங்களில் வாய்மூடி கடந்துசென்ற பா.ஜ.க.வும், “இந்துத்துவா” கும்பலும் தற்போது வானத்துக்கும், பூமிக்கும் எகிறிக் குதித்து வருகின்றன.

ஆதிப் பொதுவுடைமைச் சமூகம் தகர்ந்து தனியுடைமை சமூக உருவானபோது ஆதிக்க சக்திகளால் உழைக்கும் மக்களைப் பிரித்து, பிளவுபடுத்தி வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ள ப்பட்டன. அதில் இறுதியாக உருவானதும், பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருப்பதும் சனாதானக் கருத்தியலாகும். இது பகுத்தறிவு சிந்தனைக்கும் அறிவியல் கண்ணோட்டத்திற்கும் எதிரானது என்பதுடன் சமூக வளர்ச்சி தடுத்து நிறுத்த முயற்சிக்கும் அறிவீனமுமாகும்.

இது தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதன எதிர்ப்பு மாநாட்டில் பேசும் போது, “மனித வளத்தை தாக்கி வரும் டெங்கு, மலேரியா காய்ச்சல், கொரோனா தொற்று நோய் போல் சமூக ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கும் சனாதனத்தை எதிர்ப்பதுடன் நின்று விடக் கூடாது. அதனை அழித்தொழிக்க வேண்டும்” என்று கூறியுள்ளார். இது சமய நம்பிக்கையை இழிவு செய்யும் நோக்கம் கொண்டதல்ல என்பதை சாதாரண அறிவுள்ளோரும் அறிவர். ஆனால், பா.ஜ.க.வும், சங் பரிவார் கும்பலும் உதயநிதி ஸ்டாலின் இந்து சமயத்தை இழிவுபடுத்தியதாக பச்சை புளுகு மூட்டை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜேபி நட்டா, ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி, தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் கே.



அண்ணாமலை வரை சமய நம்பிக்கை கொண்டவர்களுக்கு மதவெறியூட்டும் மலிவான செயலில் இறங்கியுள்ளது. வட மாநிலங்களில் உள்ள அரசு அதிகாரத்தைப் பயன்படுத்த, புனைவுக் குற்றச்சாட்டுக்களை வழக்குகளாக பதிவு செய்து வருகிறது.

இதன் மூலம் நாடு முழுவதும் பதற்றத்தை உருவாக்கி, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்னும் தனிநபர் மையப்பட்ட சர்வாதிகாரக் கட்டமைப்பை ஏற்படுத்தும் வஞ்சகச் செயலில் ஈடுபட்டு வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிராக ‘இந்தியா’ அணி நாடு முழுவதும் தீவிரமான இயக்கங்களை மேற்கொண்டு முறியடிக்கும் என்பதை வரலாறு உறுதி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சி.பி.ஐ. மாநில செயலாளர் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களால் பவர் டில்லர் மற்றும் பவர் வீடர் வழங்கும் விழா காணொளி காட்சி மூலமாக துவக்கி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தருமபுரி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி தலைமையில் தருமபுரி, பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி பயனாளர்களுக்கு வழங்கப்பட்டது. உடன் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.எஸ்.சண்முகம்,தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம், முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர் பி.சி.துரைசாமி மற்றும் அரசு அதிகாரிகள், கழகத்தினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.